[1991 சனவரி 25

விசைத்தறிக் கூடம்.

* 983—திரு. ஆலவாயல் வ. சுப்பையா:

மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பொன்னமராவதியில் மூடியுள்ள விசைத்தறிக் கூடத்தைத் திறக்கவும், தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புதுக்கோட்டை மாவட்டத்தில் பொன்னமராவதியிலுள்ள விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் 22—2—1989 முதல் இயங்கிக்கொண்டு இருக்கிறது. மேலும், உறுப்பினர் களுக்கு சம்பளமும் வழங்கப்பட்டு வருகிறது.

திரு. ஆலவாயல் வ. சுப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திருமயம் தொகுதியில் உள்ள பொன்னமராவதியில் விசைத் தறிக்கூடம் ஆரம்பிக்கப்பட்டு, கடந்த சில ஆண்டுகளாக போராட்டமும், கதவடைப்பும், தொழி லாளர்கள் மத்தியிலே நடைபெறுகிறது. காரணம், தொழி லாளர்கள் மத்தியிலே போதிய சம்பளம் கிடைக்கவில்லை. தொழி லாளர்களுக்கு உரிய வசதிகள் செய்து தரப்படவில்லை என்பது தான். எனவே, அவர்களுடைய குறைகளைத் தீர்க்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சம்பளம் வழங்கிவிட்டார் கள் என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்களே, பிறகு என்ன?

திரு. ஆலவாயல் வ. சுப்பையா : போதிய அளவு.......

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சங்கம் 1988ஆம் ஆண்டு துவங்கப் படுவதாக இருந்தது. மின்சாரப் பற்றாக்குறை காரணமாகவும், உதிரிப் பாகங்கள் இல்லாத சூழ்நிலையின் காரணமாகவும், கால தாமதம் ஏற்பட்டு, விரைவான நடவடிக்கை மூலமாக 22–2–1989 அன்று திறக்கப்பட்டு இருக்கிறது. அந்த நெசவாளர் சங்கத்தைப் பொறுத்த வரையில், தற்போது லாபத்திலே இயங்கினாலும், குவிந்த நஷ்டம் அதிகமாக இருக்கிற காரணத்தால். தற்போது அதிகமாகக் கூலி கொடுக்கிற வகையில், காடாத் துணியை உற் பத்தி செய்ய இலக்கீடு ஒதுக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் அதிகமான சம்பளம் கொடுக்கவும் அந்தச் சங்கம் தொடர்ந்து லாபத்திலே இயங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1991 சனவரி 25]

திரு. ஆலவாயல். வ. சுப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக பெருகிக் கொண்டு இருக்கிற இந்த நேரத்தில், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு விசைத் தறிக் கூடம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி ஆதாரத்தின் ஒதுக்கீட்டை ஆய்வு செய்து, இதுபோன்ற திட்டங்கள் செயல்பட முடியுமா என்பதை ஆராய்ந்து பார்க்கலாம்.

10-00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினா நேரம் சற்று நீட்டிக்கப்பெறுகிறது.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

* 5286— திரு. மொஞ்சனூர் ப. இராமசாமி :

மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் நூல்களுக்கு சாயமிடும் பணியைத் தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைப்பதற்கு அரசு தடை விதிக்குமா?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் நூலினை சாயமிடும் பணியை மேற்கொள்ளும்பொழுது சொந்த சாயச்சாலை இருப்பின் அவற்றிலும், சொந்த சாயச்சாலை இல்லாத நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் நவீன சாயச் சாலையிலே சாயம் தோய்க்கும் அந்தப் பணி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலே செய்யப்பட வேண்டும் என்று இருக்கிறது. இவைகளில் எவையும் நெசவாளர் சங்கங்களில் சாயச்சாலை இல்லாத சூழ்நிலையில் ''மறுப்பின்மை சான்று'' பெற்ற பின்னால், அங்கீகரிக்கப்பட்ட சாயச் சாலைகளில் நெசவாளர் சங்கங்கள் அந்த சாயங்களை மேற்கொள்ள வேண்டுமென்று இலக்கு இப்போது நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.